4

# நாவல்
# சம்பந்தம்

ஜனவரி, 1945

உ
குருபாதம்

Regd. No. M. 4454.

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 4 | தாருண ஹு மார்கழி மீ JANUARY 1945 | இதழ் 2

இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.

FEB 1946

20/5/51

உ

## பொங்கல் வாழ்த்து

பருதியங் கடவுளைப் பண்புற வாழ்த்தும்
பொங்கற் புதுநாள் பொலிவுடன் வந்ததால்
ஆழிசூ ழுலகி லனைத்துவா ழுயிர்க்கும்
இளமையு மின்பமும் இணையிலாப் புகழும்
நீடுவாழ் நாளும் நிலைபெறு செல்வமும்
ஆலவா யண்ண லரன்றிரு வருளால்
சிவநெறிச் செல்வமும் பொங்குவான் வேண்டி
புதுக்குமின் இல்லம்! புதுக்கலங் கொள்மின் !!
கதலியும் கன்னலும் கவின்பெறு மஞ்சளும்
சேர்தர வைத்துச் செம்மை மனத்தொடு
ஏகனும் இறைவன் இணையடி போற்றி
பொங்கல் விழாவினைப் பொற்புறப் போற்றுமின் !!!

சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

## அரியது எது ?

உலகத்தின்கண் காணப்படும் எழுவகைத் தோற்றத்து எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதங்களுள் மிகச்சிறப்புடையது—பெருதற்கு அருமையானது மானுடப்பிறவி என்பது யாவரும் உணர்ந்ததொன்று.

அதில் இவ்வுலகத்தில் வேதாகம வழக்கம் இல்லாத நாட்டின்கண் பிறவாது அவ்வழக்கம் மிகுந்துள்ள சிறந்த நாட்டில் பிறத்தல் மிகவும் அரிது. அவ்வாறு பிறத்தல் முற்செய் தவத்தானேயாம். இவ்வாறு பூர்வ புண்ணிய விசேடத்தால் மானுடச்சட்டை பெற்ற உயிர் தத்தமக்குள்ள சமயநெறி நின்று ஒழுகி அதன் முடிவிற் பெறக்கிடப்பதாகிய பேரின்பத்தை அடைதற்குரிய மார்க்கத்தை அவாவும். அவாவவே அத்தகைய அந்தமில்லின்பத் தழிவில் வீட்டை முடிபொருளாகக் கூறும் சமயத்தையாராயும். முடிவில் பல சிற்றாறுகளெல்லாம் ஒரு பெரிய ஆற்றிற் கலப்ப அது நேரே கடலைச் சார்ந்ததுபோல பல சமயங்களெல்லாம் தன்னுளடங்கத் தான் நேரே பரம்பொருளாகிய சிவபெருமானைச் சாருவதும், அவரவர் தகுதிக்கேற்ப அரும்பு மலர் காய் கனிபோல் ஒன்றுக்கொன்று சாதனமாக அமைந்த சரியை முதலாக நால்வகையாக நின்று முடிவிற் பேரின்பம் அளிக்கவல்லதுமாகிய ஒப்புயர்வு இல்லாச் சிவநெறியாகிய சைவசமய நெறியே சிறந்ததென்று ஓர்ந்து அதன்பாற்பட்டு ஒழுகத்தலைப்படும். இப்பேறு மக்கட்குக் கிடைப்பது மிக அரிதினும் அரிது.

"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பித்
தாழ்வெனும் தன்மையோடு சைவமாஞ் சமயஞ்சாரும்
ஊழ்பெறலரிது"

—சித்தியார்.



குருபாதம்

## அரன் அடியார்க்கு எளியனாந் தன்மை

[தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான்,
திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள், குடவாயில்.]

"அடியார்க்கு எளியன்" என்ற சொற்றொடர் சைவப் பேரறிஞர் செவிகளுக்குப் பெருவிருந்தாகும். இன்பம் விளைவிக்கும். ஏன்? எந்தவாய் 'உலகெலாம்' என்று உரைத்ததோ? எந்தவாய் 'பித்தா' என்று அடியெடுத்துக் கொடுத்ததோ? எந்தவாய் பலர் கூடிய மணமங்கலத்து வன்மைகள்பேசி வழியடிமைக்காக வாதாடியதோ? எந்தவாய் வேதமுதலோ? எந்தவாய் 'மதிமலிபுரிசை' என்றபாடல் இயம்பியதோ? எந்தவாய் "கொங்குதேர் வாழ்க்கை" என்றபாடலைச் சொல்லிக் கொடுத்ததோ? எந்தவாய் பலகாலத்தும் பல அடியார்க்கும் கனவிலும் நனவிலும் காட்சி வழங்கியதோ அந்தத் திருவாயிற்றோன்றி—திருவாசகமும், திருக்கோவையாரும் எழுதிய திருக்கரத்தாலே எழுதப்பெற்று, சைவ சாத்திரங்கள் பதினான்கிற் பெரும்பாலனவற்றை ஆக்கிய பெரியார்க்கு—கொடிக்கவி கூறித் தில்லைக்கொடியை ஒல்லையேற்றிய பெரியார்க்கு, ஒரு சாம்பானை உய்விப்பதற்காக அனுப்பப்பெற்ற திருப்பாசுரத்தை நமது நினைவிற்குக் கொண்டுவரும். அப்பாசுரம்:-

"அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு—படியின்மிசை
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்கை முறை" என்பது.

இப்பாடலில் முத்தியுலகிற்குரிய முதல்வன் பெற்றான் சாம்பானுக்கு முத்தியளிக்க அடியாரை வேண்டுவது முதல் எளிமை. உலகில் ஒரு நிலையடைந்த செல்வருங் கூட பல நிகழ்ச்சிகளில் பலருக்கு எளியராயிருப்பதை

மறைத்து ஒழுகும்போது அடியார்க்கு எளியன் எனத் தன்னைத்தானே அறிவிப்பதைப் பெருமையாய்க் கோடல் இரண்டாவது எளிமை. தான் ஆண்டா யிருந்தும் அடியாராகிய உமாபதிசிவத்தை முத்தி கொ தீக்கைசெய் என்று இறைமைத்தன்மையுடன் இயம் பாது முத்திகொடுக்கை முறையென முறையை இயம் பியது அவ்வெளிமையின் ஆட்சி. இவ்வாறு இப்பாடல் முழுமையுமே எளிமையை யியம்புகின்றது.

### எளிமை எங்குச் சிறக்கின்றது

எளிமை சிறப்பது அருமையிடத்து. உலகியலிற் செல்வன் ஒருவன் தன்மதிப்பின்றி ஒழுகுவானுயின் அது அவன் எளிமையை யறிவிப்பதாகும். கல்வி யாளன் அடங்குவனுயின் அது அவன்கல்வி எளி மையைக் காட்டுவதாகும். அரசன் காட்சிக்கு எளிய னுயின் அது அவன் எளிமையாகும். 'இளையான் அடக் கம் அடக்கம் கிளைபொருள், இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம், ஒறுக்குமதுகை யுரனுடை யாளன், பொறுக்கும் பொறையே பொறை' என்று நீதிநூலும் தெரிவிக்கின்றது. ஆதலால் அரன் அடி யார்க்கு எளியனுதல் அரியனுகவும் இருத்தல் வேண்டும். யாருக்கு அரியன்? எப்படி அரியன் என்பனவற்றை ஆராய்தல் அரன் எளிமையை அறிந்து போற்றச் செய்யும் பெருவழியாகும்.

'காண்டற்கரிய கடவுள் கண்டாய்' என்றும், 'அயன வனும், மாலவனும் அறியாவண்ணம் ஆரழலாய் நீண்டு நின்ற அண்ணல் கண்டாய்'' என்றும், ''அறிவரிய நுண்பொருள்கள் ஆயினன்காண்'' 'அரியானை' என்றும் வரும் சைவக் கிழவர் திருவாக்குகள் இறைவன் காட் சிக்கு அரியன், அறிவுக்கரியன், அணுகற்கரியன், ஏன்; எல்லாவற்றிற்கும் அரியன் என்பதை விளக்கு கின்றன.



11 FEB 1946

தேவர்கள் எம்மைப்போலவே சகலான்மாக்களே யாயினும், நல்வினைப்பயனுகிய நுகர் வொன்றே யுடை யர்களாய், செயற்பாடு அற்றவர்களாய் அவ்வப்போது மூலமலத்தின் மூணைப்பால் உண்டாகும் சிவநிந்தை முதலியவற்ருல் உண்டாய தீவினையால்—அதன் முதிர்வால் சிற்சில துன்பங்களை அரசர்கள் வாயிலாக அடைந்தாலும் இன்பமே நுகர்பவர்களாய், அந்நுகர் விற்கேற்ற தேவசரீர முடையவர்களாய், திருக்கைலை சென்று ஸ்ரீகண்டருத்திரர்முன்பு தங்குறைநிறைகளைக் கூறிக்கொள்ளும் தனிச்சிறப்பை யுடையவர்களாயிருந் தும், பாற்கடல்மீன் பாலின்சுவை நுகராததுபோல அறிவுருவின் ஆண்டவனையறியும் ஆற்றலிழந்திருக் கின்ருராதலின் அத்தேவர்களுக்கு அறிதற்கு அரியான் என்று தொன்னூல்கள் கூறுகின்றன. அவற்றுள் சிறந்த எடுத்துக்காட்டு ''இமையோர்க்கும் அறிவரி யான்''' என்ற ஞானசம்பந்தத்தின் அருள்வாக்கு.

சுந்தரர்பெருமான் கோடிக்காட்டுப் பதிகத்து ''நெடியானேடு நான்முகனும் அறியொண்ணுப் படி யான்'' என்று திருவாய் மலர்ந்தருள்வதும் இங்கு ஒப்பு நோக்கற்பாலன. மணிவாசகப் பெருமான் ''திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடி'' என்றும், ''பங்கயத்தயனேடு மாலும் அறிவரியசோதி'' என்றும் அருளியிருப்பனவும் அத்தகையனவே.

(வரும்)

## தருமபுர ஆதீன வித்வான் மறைவு

தருமையாதீன வித்வானுக விளங்கியவர் – ஆங்கில மும் அருந்தமிழுங் கைவரப்பெற்றவர் – தமிழ் உரைநடை நூல்கள் எழுதுவதில் மிகவல்லவர் – சமயத்திற்குக் கண் போன்றவர் ஆகிய அன்பர் திரு.காழி.சிவ. கண்ணுசாமி B.A. அவர்கள் சிலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து 2—1—45 ல் மன்னுர்குடியில் தமது பூதஉடலை நீத்துப் புகழுடம்பை எய்தினுர்கள்.

இவர்தம் இன்னுயிர் இறைவன் இணையடியிலின்புறுக.

உ

குருபாதம்

# பெரியார் பெருமை

[ஆசிரியர், திரு. அ. வரதஞ்சையப் பிள்ளை அவர்கள்]

ஈண்டுப் பெரியாராவார் யாவர்? வயது, வடிவு, அழகு, அறிவு, ஆண்மை, ஆற்றல், கல்வி, செல்வம், குலம், உயர்பதவி முதலாயவற்றில் எதனிலுயர்ந்தார் பெரியார்? என வினவலாம். இங்குக்கூறிய பலவற்றானும் ஒருங்கு சிறப்பெய்தினும் ஒருவர்பெரியோராகமாட்டார். மற்று யாரே பெரியார்? எனின் நம் தமிழ்மறை கூறுமாறு (பெரும்பயனை விளைவிக்கவல்ல) செய்தற்கருஞ் செயல்களை ஆற்றும் அவரே பெரியாராவர். அச் செயல்கள் எவை? எனின் உலகபோக நுகர்ச்சிகளில் அவாத்தூண்ட மனம் நினைத்தவாறெல்லாம் நம்போற் செல்லவிடாது பின்னால்வரும் தீங்குகளுக்கஞ்சி தமக்கும் பிறர்க்கும் நன்மை பயப்பனவாகிய செயல்களிற் செலுத்தி ஐம்புலன்களையும் தம் பேராற்றலால் அடக்கி ஆளும் வைராக்கியவான்களாய் இம்மானுடப்பிறவியால் பெறுதற்குரிய அரும்பெரும்பேறும் பேரின்பவீட்டை அடையும் வழிதுறைகளை அறிந்து அநுபவ வாயிலாக அப்பேற்றை அடைந்து பேரானந்தம் எய்தும் பெற்றியினரே பெரியோர் எனப்படுவார்.

அன்னாரது பெருமைகளைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் அடிகள் அருளிய திருக்கூட்டச் சிறப்பில் கண்டவாறு விரித்துரைப்பாம்.

அவர்கள் "ஆரேனுமன்புசெயின் அங்கே தலைப் படுங்காண், ஆரேனுங் காணா அரன்" என்பதனால் இருவினைப்பாசமும் மலத்தொடர்பும் ஒருங்கு நீக்கி முதல்வன் திருவடிக்கண் நீங்காது செலுத்தும் நிறைந்த பேரன்புதானே, அன்பே உருவமாகிய இறைவனை



இனவுரிமையால் அழைப்ப, அவரே வலியவந்து தம்மை ஆட்கொள்ளப்பெற்ற பாக்கியசாலிகள். அவ்வன்பினாலேயே தாம் என்றும் எங்கும் காணாப் பேரின்பத்தை எய்தியதால் உடம்பு பூரிக்க உள்ளம் களிதுளும்பப் பெற்றவர்கள். (உள்ளம் இன்புற்றால் உடம்பு பூரிக்குமென்பதை "தலைவனைப் பிரிந்தபோது தலைவியின் கைக்கங்கணமாகிய அணி, அவனைக் கூடப்பெற்றவழி சிறுவிரல் மோதிரமாயிற்று" எனக்கூறுதல் அறிக.) முடிந்த பெரும்பேறும் அழியாவின்பத்தை இவ்வுடலோடே அடைந்தமையான் இனித் தமதுசெயல்கள் வேறுபயன் கருதாதனவாக "உலகெலாமாகி வேறாயுடனுமாய்" நிற்பவனும், என்றும் அடிமை உயிர்கட்கிரங்கியருளுங் கருணையாளனும் ஆகிய சிவபெருமானுக்கும், அவன்மெய்யடியாருக்கும் (எவ்வுயிரும் அவன் நிலைபெற்றுறையும் கோயில்களாதலின்) எல்லாவுயிர்கட்கும் (ஜீவபோதமறநின்று) கைத்தொண்டு செய்யுங் கடப்பாட்டினர். ஒரு மங்கை தன் கணவன் புனைந்த மங்கல நாணையும் அவன் உவக்கும் மஞ்சட்பூச்சையும் நீக்காது மேற்கோடல்போல தங்கள் நாயகனது அருட் கண்மணியாம் அக்கமாலையையும் எரிநிறத்தினனாகிய அவர்க்கியல்பாய் மெய்ம்மறைக்கும் வெண்டிருநீற்றையும் விரும்பி அணிபவர்கள். இக்காலத்துப் பிறரை ஏய்க்க வெளிவேடம் பூண்பார் போலாது பூசும்நீற்றை ஒப்ப அகத்தும் புனிதமாகிய சத்துவகுண முடையவர்கள். "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என இரங்கி உயிர்கட்கு அருள்பவராகலால் எத்திக்குகளிலும் தம்புகழ்செல்ல உலகுக்கு உண்மைநெறி விளக்கும் உபகாரிகள். வானந்துளங்கி, மண் கம்பமாகி, மால்வரையுந் தானந்துளங்கித் தலைதடுமாற, கடலுண் மீனம்பட விரிசுடர் வீழினும், இப்பூதங்கள் சாத்துவிக முதலிய மூன்றிற் கடைநின்ற தாமதாங்காரத்திற்றோன்றிய தன்மாத்திரைகளின் தூல உருவமாதலானும், எல்லாம்வல்ல இறைவனால் மாயாகாரியமாக நிறுவப்பட்டன ஆதலானும் பூதநாதனாகிய

அம்மையப்பனுக்கு அடியராகிய நம்மை இவை செய்யக்கிடந்ததென்? என்று அஞ்சாதவர். அநாதி கேவலநிலையில் இருட்டறைப்பட்ட குருட்டுச் சேய்போற் கிடந்த ஆன்மாக்கட்கு, மாயையால் தநுகரண புவன போகங்களைத்தந்து மேலும் மேலும் அவற்றின் வளர்ச்சி வேண்டித் தோன்றாத் துணையாய்நின்று அவ்வப்போது "பால்நினைந்தூட்டுந் தாயினும்சாலப் பரிந்து" உதவும் ஆண்டவனுடைய எல்லையற்ற கருணையை நினைக்குந்தோறும் உள்ளமுருகி உயிரும்கரைய நெஞ்சிடம் சிறிதெனநிவந்து கண்வழிப்பொழி அன்புக் கண்ணீர் ஆகம் நனைப்ப அப்பெருமான் அடியசேவடியன்றி வேறுளதென்னாத ஒருமனக்கோட்பாடுடையாராகிப் பற்றறப்பற்றி மந்தியைத்தழுவிய மகவே போல் இறுகப் புல்லி இன்பத்துய்க்கும் நீர்மையினர்.

வான்கெட்டு மாருதமாய்ந்து அழல்நீர் மண் கெடினுந்-தான்கெட்டலின்றிச் 'சலிப்பறியாத் தன்மை'யனைச் சார்புகொண்ட துணைவலியானே எதற்குஞ் சலியாத பெருங் குணக் குன்றமன்ன பெற்றியர்.

"இங்ஙனம் வேண்டுதல் வேண்டாமையிலா" முழுமுதற்கடவுளை யடைந்ததற்கேற்பத் தாமும் ஓட்டையும், பொன்னையும் ஒப்ப நோக்கும் விருப்பு வெறுப்பில்லா நடுநிலை உள்ளத்தராய் வறுமையில் துன்பமும் செல்வத்து மகிழ்ச்சியும் கொள்ளாது அவ்விரு நிலைகளினும் "தக்க பிரியாப் பிரியமின்றி யோட்டில்-தபனியத்திற் சமபுத்திபண்ணிச் சங்கரனோ-டொக்கவுறைந் திவரவனை யவனிவரை விடாதே உடந்தையாய்ச் சிவன்றேற்றம் ஒன்றுமே காண்பர்" என்றபடி சிவத்தோடு வேறற நின்றின்புறும் தியான ஞானப்பயன்கொண்ட (அஞ்ஞான உலகம் அறியாத) பெருஞ் செல்வர்கள்.

(வரும்)

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at The Gnanasambandam Press, Dharmapuram. (Mayavaram).

சிவ
குருபாதம் Regd. No. M. 4454.

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

தாருணவூ தைமீ
FEBRAURY 1945

இதழ் 3

இதழாசிரியர்:—
தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.

11 FEB 1946

இனி, முற்கூறியவாறு சைவமாஞ் சமயஞ்சாரும் ஊழினைப்பெற்ற உயிர்கள் இறைநெறி நின்று தொண்டாற்றிச் சிவத்துவம் உற்றுப் பேரின்பம் அடைதற்கு இன்றியமையாச் சிறப்பினையுடைய இடம் புண்ணிய பூமியாகிய பரதகண்டமாகும். "வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன்றனை அர்ச்சிப்பர்", "புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே" என்பன அருள்வாக்கு. மேலும் அரிபிரமேந்திராதி தேவர்களும், அகத்தியர் முதலிய முனிசிரேஷ்டர்களும் மண்மேல் வந்து பூசித்துப் பேறுபெற்ற புண்ணியத் தலங்கள் பற்பல. ஆதலால் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாத் தொடங்க முற்பட்ட பெரியோர்களும் வேதாகம விதிப்படி சிவவழிபாடு செய்து பற்பல பேறுகளைப் பெற்றுள்ளார்கள். ஆகவே யாவருக்கும் தாயகமாக விளங்குவது சுத்தாத்துவித சித்தாந்த சைவசமயமாகும்.

"அந்தோ ஈதநிசயம் இச்சமயம்போல் இன்று அறிஞரெல்லாம் நடுவறிய அணிமா ஆதி, வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம் வைத்திருந்த மாதவர்க்கும் மற்று மற்றும், இந்திராதி போக நலம் பெற்ற பேர்க்கும் இதுவன்றித் தாயகம் வேறு இல்லை இல்லை."
—தாயுமானவர்.

௨
குருபாதம்

# அரன் அடியார்க்கு எளியனுந் தன்மை

[தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்வான்,
திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள், குடவாயில்.]

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனம் பல எடுத்துக்காட்டுகள் நம்முன் நிற்கும் போது இறைவன் அரியவற்றுள் எல்லாம் அரியனு யிருத்தலின் அவ்வரனைப்பற்றி நாம் சிந்தை செய்வ தெப்படி? என்று தன்னம்பிக்கையற்ற தன்மையும் உண்டாகலாம். ஆனுல் சைவத்திருமுறைகள் அவ் வையக் கடலுக்கு நன்னம்பிக்கைத் தோணிகளை நல்கு கின்றன. "கருதுவார்க்கு ஆற்ற எளியான்கண்டாய்" "மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய்" "பண்ணமர் வீணையினுன் பரவிப் பணி தொண்டர்கள்தம், எண் ணமர் சிந்தையினுன் இமையோர்க்கும் அறிவரியான்" "தொண்டர் தமக்கு எளியசோதியை" என்பன அத் தோணிகள். ஆண்டான் அரியனுயினும் இடைவிடாது தியானிப்பார்க்கு மிகமிக எளியன் என்று தெரிவிக் கிறது. அங்ஙனம் எளியனுகிய அவன் நினைப்பவர் மனத்தையே கோயிலாகக் கொண்டுவிடுவான். ஆனுல் மனம் மாண்டமனமாக இருத்தல் வேண்டும். 'மாண்ட மனம்' என்பது மாட்சிபெற்றமனம். மனத்திற்கு இயற்கைமாட்சி யுண்டா? உண்டு. ஒரே ஒரு மாட்சி. அதாவது; தவ விசேடத்தால்—சற்குரு சாதனையால்— அடியார் பாவனையால் இயற்கை மாட்சிபெற்று அரனடி பற்றும் மாட்சி. இம்மாட்சி சிறக்கவேண்டுமாயின் ஏனைய தாழ்மைகள் மாளவேண்டும். ஆகவே பாசத் தடையால்-பசுஅறிவால் ஆக்கப்படும் பலதாழ்மைகள் மாண்டமனம். தாழ்மைகள் மாண்டதால் அரனடிபற்றி மாண்டமனம். இங்ஙனம் இருவகையினும் மாண்ட மனத்தார் மனமே இறைவன் எளியனுயிருக்குமிடம்



என்பது அறியப்பெறுகின்றது. இன்னும் வாயாற் பரவவேண்டும். 'என்வாய் நின்சீர் அல்லாத செப்பற்க' என்ற உறுதிப்பாடு வேண்டும். என்தலை சிவபெரு மானுக்கன்றி வணங்கற்க என்ற நிலையுள்ளம் வேண்டும். அங்ஙனம் பரவிய தொண்டர்-பணிகின்ற தொண்டர் களது சிந்தையில் எளியனுயிருப்பான்.

## யாருக்கு எளியன்

அடியார்க்கு, தொண்டர்க்கு, அன்பர்க்கு எளியன். அடியென்பது திருவடி, முதல், வித்து, தொண்டு முதலிய பல பொருள்களைத் தந்து நிற்கும் சொல். ஆயினும் திருவருள் வசமான ஞானத்திருவடியை நெஞ் சகத்து நினைத்து நினைத்து நெக்குருகுபவர்கள் அடி யார்கள். இத்தகைய அருட்பதிவு உண்டாவதற்கு நித்தலும் எம்பிரான்றன் கோயில்புக்குப், புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்தேத்தி, கூத்துமாடுதலாகிய தொண்டு அல்லது அடிமை யுணர்ச்சி அவசியமாதலின் இதனையுடையவர்கள் அடியார்கள். மரத்தின் தன்மை வித்திலடங்கியிருப்பது போல தொண்டு மனத்துக்கருவிருந்து கனிந்து தொண்டராதலின் (அடி—வித்து) தொண்டென்ற வித்தினை உடையர் அடியார்கள். அடியாகிய முத லிருந்தே கிளைகளையும் பிறவற்றையுந் தாங்கி நிற்பது போல அடியார்கள் உண்மையாலேயே உலகம் நிலை பெறுதலின் உலகத்திற்கு அடிபோன்றவர்கள் அடி யார்கள். இவ்வாறு நெக்கு நெக்கு நினைந்து, மீளா அடிமை உனக்கே யாளாய் என்று தொண்டு பூண்டு உலகிற்கு ஆணியாக இருப்பவர்கள் அடியார்கள். அத்தகைய அடியார்களுக்கு ஆண்டவன் எளியன். இத்தகைய தொண்டர்கள் ஆகாமையினுலேயே இமைய வர்களும், இந்திரனும், பிரமனும், திருமாலும் இறை வனை யறியவும் கூடவில்லை. இறைவன் அவர்களுக்கு எளியனுகவும் ஆகவில்லை. இதற்கு மேற்கோள் இலிங்க

புராணத் திருக்குறுந்தொகையுள் வரும் இறுதிப் பாசுரம். அது,

"செங்கணானும் பிரமனுந் தம்முளே
எங்குந்தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணியமூர்த்தியே."

என்பது. இது அப்பர் அநுபவத் திருவாக்கு. திருமாலும் பிரமனும் காணமுடியாமைக்குக் காரணங்களை முதற் பத்து பாக்களும் அறிவிக்கின்றன. அக்காரணங்களிற் சில. "வெந்த நீறு விளங்க அணிந்திலர், கந்த மாமலர் இண்டை புனைந்திலர்", "குண்டி பூண்டு கபாலங் கைக்கொண்டிலர்" "பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்" "ஆப்பிநீரோ டலகுங் கைக்கொண்டிலர்" "எரிவண்ணனை அந்தங் காணலுற்றார் அங்கு இருவரே" என்பனவாகும். இவற்றை ஒன்று கூட்டி உள்ளத்துறுத்தும்போது சாதனங்கள் கைவரப்பெறாத தேவர்கள், சிறப்பாகத் திருமால் பிரமன் முதலியவர்கள் காணாராயினர்; சாதனங் கைவரப் பெற்றவர்களுக்கு சிவலிங்கத் திருமேனியில் இங்கிருக்கிறேன் என்று இறையவர் எளிவந்து காட்சி வழங்குகின்றார் என்பதே; அப்பர் அடிகள் அநுபவ வாயிலாக அறியக் கிடப்பன.

இவ்வாறு சைவத்தமிழ் மறைகளில் பல பிரமாணங்கள் திருவருள் கூட்டுவிக்க நாம் காணலாகும். ஆயினும், தமிழ் மறைகளிற் சென்ற சிந்தனையை மாற்றி வரலாற்று நூல்களிற் செலுத்துவோம். அதினும் சிறந்த திருத்தொண்டர் புராணக்காட்சியே முதற்கண் நிற்கின்றது. பெரிய புராணத்தின் முதற்பகுதியில் இறைவன் அடியார்க்கு எளியனானதைவிட 'அடியார்க்கும் அடியேன்' என்ற அடியார்க்கு எளியனான இடங்கள் நமக்கெல்லாம் மிக இன்பந்தருவன.

(வரும்)

11 FEB 1946
ADRAS

உ

குருபாதம்

# பெரியார் பெருமை

[ஆசிரியர், திரு. அ. வரதாஞ்சையப் பிள்ளை அவர்கள்]

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

இனிக் "கேட்டல்" முதலிய நால்வகை ஞானப் பகுதிகளிலும் கேட்டபொழுது இறைவன் இயல் புணர்ந்து அவனின் வேறாய்த் தோன்றியும், பின் கேட்டவற்றைச் சிந்திக்கும் பக்குவத்தால் தனக்கும் முதல்வனுக்கு முளதாகிய கலப்புத் தொடர்பு அறியப் பட்டு ஒன்றாய்த் தோன்றியும், அதன்பின் தெளிதல் பெற்றவழி ஒன்றாயும் வேறாயுமிருத்தலன்றி உடனாகவு மிருத்தல் தென்படவே, இத்தனை நாள் தம் உள்ளத் தூடொளித்து நின்ற கள்வனைக் காண்பதினும் வேறு வேண்டத்தக்கதொன் றின்மையால் அப்பெருமானைக் காட்டுங் கருவியாக இருந்து முதிர்ந்த அன்பொன் றனையே வேண்டுவதல்லது, குவித்து அவன் பொன்னடியைத் தொழுத கைகளை மீண்டும் விரித்துக் கூலி கேட்பாராய்த் தமக்கு வீட்டின்பம் அருளென வேண்டல் அறியாத மேன்மையாகிய மானத்தினர்.

மற்றும் ஐம்பூதங்களின் பஞ்சீகரணமாகிச் சடமாக ஒழியும் இவ்வுடம்பையும் மிகையெனக்கொண்டு வெறுத்துத் தம் ஆவியையும் உணர்வோடிழந்து, தம்மிற் கலந்து நின்ற கண்ணாளனையே சதா நோக்கிநிற்கும் அவர்கள் அணிகலன் அக்கமாலையே; உடையோ கிழிந்த பழைய தைத்த கந்தையே. இவ்வாறு தம்மைக் கோலஞ் செய்வதை மறந்தாராயினும், இறைவன் திருவடித் தொண்டில் என்றும் ஈடுபடுவதல்லால் மற்றொன்றும் அறியாமாண்பினர்.

அன்பே யென்னன்பேயென் றன்பா லழுதாற்றி அன்பே அன்பாக அறிவழியும் அன்பன்றி, வேறு சிறந்த இன்பக்கருவி இன்மையைக் கண்கூடாகக் கண்ட அநுபவிகளாகலின், ஒரு சிறு மகவு தன்பசி தணிக்கும் மருந்து தாய்முலைக்கண்ணன்றி யில்லை யென்றறிந்த பயிற்சியால் பசி வந்துழி எல்லாம் அதனையே நாடி நிற்றல்போன்று என்றும் அன்பொடு பிரியா ஆர்வத்தினர். ஆவேசத்தாற் பிடியுண்டான் ஒருவன், அறிவிழந்து செய்யும் செயல்கள் முற்றும் அவன் செயலாகாது ஆவேசத்தின் செயலாமாறுபோல "சித்தத்தைச் சிவன்பாலே ஒப்புவித்துப் பரவச முற்றிருக்கும் அந்நிலையில்" "சிவனுமிவன் செய்தியெலாம் என்செய்தி யென்றும் செய்ததெனச் சிவனுக்குச் செய்ததென்றும்" எம்பெருமானே முன்னின்றேற்பனாகலின், பூதலத்தோர் இகழத்தக்க செயல்களைத் தாம் செய்வாரேனும் அதனால் ஒரு சிறிதும் தீங்கெய்தாத புனிதர்கள் தாம்மேற்கொண்ட கொள்கையில் ஊன்றி நிற்பவராதலின், அக்குறிக்கோளுக்குச் சிறிதேனும் இடையூறெய்துவதாயின், அஞ்சுவதும் பழிபாவம் எனக் கருதுவதும் இலராகித் தம் தலையை உடை வெளுக்குங் கல்லில்உற முட்டுவர்; அரிவாள்பூட்டி ஊட்டி அறுத்துக்கொள்வர்; அரசனது பட்டத்து யானையே யாயினும் துதிக்கையைத் துண்டாக்கி மேல் விளைவு கருதாது மெய்ம்மறந்து நிற்பர்; கடவுளுக்குச் சாத்தும் நன்மலரை அறியாதெடுத்து முகர்ந்ததற்காக, அவள் அரசன் பெருந்தேவி என்றறிந்துவைத்தும், அன்னாள் மூக்கை அடியழுந்தக் கொய்து சூர்ப்பனகைக் கோலங் காண்பர்; தன் அரும்பெறல் மனைவியின் அவமான காரணங்கேட்டு உயிர்ச்சுற்றின்மேல் உலக்கையும் வீழ்ந்தாற்போல், அவள் இழந்த மூக்கொடும் தன் அடிமிசை வீழ்ந்தலறுவதுங் கருதாது, கை எடுத்துத்தர மூக்கு மோந்ததாகலின் முதற்குற்றம் கையினிடத்ததே என வாளுருவி அவள்வளைமலர்க்கையை அறத்துணிப்பர்; மற்றும் இன்னோரன்ன நெஞ்சு நடுக்குறும் தீவினை



களைப் புரிய முன்னிற்கும் உரம்பெற்ற மாபெரும் வீர மணிகள், அக்கினிக்கட்டு மந்திரத்தால் நெருப்பிற் குளிப்பினும் தம் தன்மை மாறுபடா திருத்தலும்; குதிரை செலுத்தும் வலவன் அதன் வேகத்துக்குட் பட்டும், தன் ஆற்றல் நீங்காமையும்போல, தாங்கள் விரும்பிய எந்தக் கோலத்தில் எத்தொழிலில், இல்லறம் துறவறமென்னும் இரண்டில் ஏதேனும் ஒன்றில் நடப்பாராயினும் தங்குறிக்கோளிற் கொண்ட கண்மாறாக் கொற்ற முடையவர்; மற்றும் இவைபோன்ற பல அற்புதக் குணத்தினர் பெருமைகள் நம் தெய்வச் சேக்கிழார்க்கல்லது பிறர்தாம் செப்பற்கொரு சிறிதும் இயலாதாம்.

தமிழில் இயல், இசை, நாடகம் என முப்பெரும் பகுதிகள் இருத்தல் போன்று, நம் அரும்பெறற் சைவத்தினும் கருத்து வகைகளாகிய சாஸ்திரங்களும் அவற்றை இசைவகையில் விரிக்கும் தேவார திருவாசகாதிகளும் போல்க் காட்சி வகையில் கற்றோரும் மற்றோரும் கலந்து களித்தின்புறற்குரிய பன்னிரண்டாந் திருமுறைகளிற் கண்ட சரித்திரங்களில் ஏற்பன சிலவற்றை நாடகமாக இயற்றி, சைவநூற் கருத்துக்களை அந்தந்தக் கதாபாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்தி, அவைகருவியாக அவர்கள் கொண்ட பத்தியின் உறைப்பையும், பரமனார் அவர்கட்கு எளிவந்திரங்கியருளும் கருணைத் திறத்தையும், இல்லறவாழ்க்கையில் தம் காதலிகளுடன் நேசித்து வாழ்ந்த நேர்மையையும், கணவனுக்கு உரிமைபூண்டு அடித்தொண்டுபுரியும் அந்நங்கைமார் கற்பினையும், அவர்களின் தூய மனத்தின் துணிகரச் செயல்களையும், இவைபோன்ற அருங் குணப்பெருஞ் செயல்களையும் ஆடவர் மகளிர்க்கு உபதேசிக்கும் வழியில் முயல்வது சமயங்களின் பற்று நாட்கு நாள் குறைந்து வரும் இக்காலத்தில் ஒவ்வொரு சைவத்தலைவர்களின் தீராத்தலைக்கடனும் என்றொரு கருத்து என்னுட்புக்கது.

(வரும்)

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி புஷ்யோற்சவ

## பிரசங்கங்கள் இசைநிகழ்ச்சிகள்

*22—1—45* ஆதீன ஒடுக்கம் ஸ்ரீ சிவகுருநாதத் தம்பிரான் சுவாமிகளவர்கள் தலைமையில் ஆதீன சைவப்பிரசாரகர் திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள் "நம்குருநாதன்" என்பது பற்றியும், மாயூரம் நாஷனல் நடுத்தரப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. N. S. கோபாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் "தோழனுக்குத் தோழன்" என்பதுபற்றியும் பேசினார்கள்.

*23—1—45* திருக்கடவூர் கட்டளை விசாரணை ஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள் தலைமையில் ஆதீன அடியார் ஸ்ரீ நாகலிங்க சுவாமிகளவர்கள் "சமயத்தொண்டு" என்பது பற்றியும், தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், திருவையாறு வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் "குறள்" என்பதுபற்றியும் விரிவுரையாற்றினார்கள். பிறகு தமிழிசை இளைஞன் திருவாரூர், மாஸ்டர்ஸ்ரீ T. V. நமசிவாயம் தக்க இன்னிசைக் கருவிகளுடன் இசைநிகழ்ச்சி நிகழ்த்தினர்.

*24—1—45* தருமையாதீனக் கல்வி நிலைய (ஆரம்ப, வேதசிவாகம, தேவாரப்பகுதி) மாணவர்களின் இசையரங்கு நிகழ்ந்தது. பின்னர், மாயூரம் கூறைநாடு ஸ்ரீ சுவாமி சரவணபவானந்தா அவர்கள் தக்க பக்க இன்னிசைக் கருவிகளுடன் தருமபுர ஆதீனஸ்தாபகராகிய ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகளைப்பற்றி ஓர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

*25—1—45* ஆதீன அடியார் ஸ்ரீ நாகலிங்க சுவாமிகளவர்கள் தலைமையில் "குருலிங்க சங்கமவழிபாடு" என்பதுபற்றி தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், சென்னை, வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் விரிவுரையாற்றினார்கள். இரவு குத்தாலம், S. கணேசம் பிள்ளையாலும், பரோடா, குபேரதாசாலும் பயிற்றுவிக்கப்பெற்ற மாணவிகளால் நாட்டியக்கச்சேரி நடத்தப்பெற்றது.

*26—1—45* ஆதீன இளஅடியார் ஸ்ரீ கைலாசப் பரதேசி அவர்கள் தலைமையில் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், குடவாயில், வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்களால் "அம்மையார் அருட்செயல்" என்பதுபற்றியும், தருமபுர ஆதீனப் பாடசாலை இசையாசிரியர், திரு. M. சுப்பிரமணிய முதலியாரவர்கள் "தமிழிசை" என்பதுபற்றியும், ஆதீனப் பாடசாலை (தேவாரப்பகுதி) மாணவன் சுவாமிநாதன் "இளையான்குடிமாற நாயனார்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at The Gnanasambandam Press, Dharmapuram. (Mayavaram).

உ
குருபாதம் **Regd. No. M. 4454.**

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 4 | தாருண ஹு மாசிமீ MARCH 1945 | இதழ் 4

தருமபுர ஆதீனம் 11 FEB 1946

இதழாசிரியர்:—
தருமபுர ஆதீனம் ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.

## சைவசமயம்.

"தெய்வம் சிவனே சிவனருள் சமயம், சைவம் சிவத்தொடு
சம்பந்த மென்றான், சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி"

சிவன் எனும் நாமம் சிவபிரானுக்கே உரியது. அவனே–பிறவா இன்பமாகிய முத்தியை அளிப்பவன். ஈறிலாப்பதங்கள் யாவையும் கடந்த இன்பமே! என்னுடை அன்பே!! என்றபடி இன்ப உருவினன். அன்புமயமானவன். நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்புடையான். இத்தகைய சிறப்புவாய்ந்த சிவபிரானைத் தலைவனாகக் கொண்டது–சிவசம்பந்த முடையது–சைவசமயமாகும். இதுவே அறுவகைச் சமயமுமாய், அல்லவாய், எல்லாச் சமயமும் தன்னை வணங்கும்படியான இயல்பினையுடையது. மௌனமோலி தரித்து இராஜாங்கத்தில் அமர்ந்திருப்பது. எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமையே பொருளாகக்கொண்டது. தாசமார்க்கம் முதலிய நால்வகை மார்க்கத்தையும் தன்னுளடக்கிநிற்பது. குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் நிறைந்தது. திருநீறு, கண்டிகை, ஐந்தெழுத்து ஆகிய மூன்றையுமே சாதனமாகக்கொண்டது.

உ

குருபாதம்

# அரன் அடியார்க்கு எளியனுந் தன்மை

[தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான்,
திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள், குடவாயில்.]

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியபுராணத்துள் இன்பந்தரும் பகுதிகளுள் முதற்கண்ணது, சுந்தரர்பெருமான் திருக்கழுக்குன்றை வழிபட்டுத் திருக்கச்சூர் ஆலக்கோயிலை அணுகுகிறார்கள். உச்சிப்பொழுது. உணவு உட்கொள்ளும்நேரம். பசி நோய் மிகுதி. அணுக்கத்தொண்டர்கள் யாரும் இல்லை. வழிபாடு முடித்துக் கோயிலின் புறம்பு எழுந்தருளி யிருக்கின்றார்கள். இறைவன் அந்தணச் சிறுவராய் எழுந்தருளி ஐயம் ஏற்று அன்பர்பசி அகற்றினர். இந் நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான் கூறும்,

"வன்றொண்டர் பசிதீர்க்க மலையின்மேல் மருந்தானர்
மின்றங்கு வெண்டலையோடு ஒழிந்தொரு வெற்றோடேந்தி
அன்றங்கு வாழ்வார்ஓர் அந்தணராய்ப் புறப்பட்டு
சென்றன்பர் முகநோக்கி அருள்கூறச் செப்புவார்."

"வெண்திருநீற் றணிதிகழ விளங்குநூல் ஒளிதுளங்கக்
கண்டவர்கள் மனமுருகக் கடும்பகற்போ திடும்பலிக்கு
புண்டரிகக் கழல்புவிமேல் பொருந்த மனைதொறும்புக்குக்
கொண்டுதாம் விரும்பியாட் கொண்டவர்முன் கொடுவந்தார்"

என்ற இந்த இரண்டு திருப்பாடல்களும் ஊன்றியறிதற் குரியன. இவற்றுள், (ஆட்கொண்டவர்—அடியார்) விரும்பி யாட்கொண்டவர் முன் கழல் நோவ புக்குக் கொண்டுவந்தார் என்பது குறித்தற்குரியது. அதிலும் ஆண்டவன் மலைமேல் மருந்தர். அதாவது எளிதிற் கிட்டுதற் கரியதாய், கண்டாலும் நோய்தணிப்பதாய் காட்சிக்கு எளியதாய், எங்குநிற்பினும் காணுந்தரத்த தாய் இருப்பது மலைமேல் மருந்து. அத்தகையவர்



ஆண்டவன் என்பது அவர் அடைதற்கரியர் நுகர்ச்சிக் கினியர் என்பதை அறிவிக்கின்றது. அன்றியும் கபால மறைத்தும் வெற்றோடு கொண்டும் சென்றார். அதில் ஆண்டவன் தன் தன்மை மறைத்து அந்தணர்க் கேற்க வெற்றோடு தொங்கச் சென்றார் என்பதும், புவிமேற் பொருந்தாத திருவடி வீடுவீடாக அலைந்தது என்பதும் எவ்வளவு எளிமையைக் காட்டுவனவாய் எம்மைப் பிணித்து நிற்கின்றன. இது நிற்க, வன் றொண்டர் உண்டார். பசி தணிந்தது. பரமன் மறைந்தார். இத்தன்மையை எங்கள் சேக்கிழார் பெருமான்,

"ஆங்கு அருகிநின்றார்போல் அவர்தம்மை அறியாமே
நீங்கினர் எப்பொருளும் நீங்காத நிலைமையினர்"

என்று விளங்கியுள்ளார்கள். அதில் இன்பம் பெருக்கு வது இறுதியடி.

இவ்வனுபவத்தை நேரிற்கண்ட சுந்தரர்பெருமான்,

"காதல் செய்து களித்துப் பிதற்றிக் கடிமாமலரிட் டுனையேத்தி
ஆதல் செய்யும் அடியாரிருக்கஐயங் கொள்வ தழகிதே"

"காலையெழுந்து தொழுவார்தங்கள் கவலைகளைவாய் கறைக்கண்டா
மாலைமதியே மலைமேல் மருந்தே மறவேனடியேன்"

என்று திருவாய்மலர்ந்தருளினர்கள். இதில், ஐயங் கொள்வது அடியார் உடைமையாகவும் ஆண்டான் ஐயமேற்றது அழகா என்று எளிவந்ததன்மை எடுத்துக் காட்டுவது மனங்கவர் பகுதிகளுள் ஒன்று. இறைவனை மலைமேல் மருந்தென்றது சேக்கிழார்பெருமான் திரு வாக்கிலும் ஒளித்து நிற்பதும் அத்தகையதே.

திருவாரூரிலே கழுதுகண்படுக்கும் பானாளிலே பரவைதன்னூடல் தணிக்க இருமுறை தூது சென்ற தைக் காட்டிலும் எளிவந்த செய்கையும் ஒன்றுண்டோ?

கொங்குநாட்டில் பேரூர்த்தலத்துச் சுந்தரனார் எழுந்தருளியபோது இறைவன் "அத்தமேற் பெரிதும் உகப்பன்" என்று செய்து கொண்ட உடன்படிக்கைப் படி நடக்க இயலாதவர்போல பட்டிப்பெருமான் பள்ளனாகி மறைந்தது எவ்வளவு எளிமையைக் காட்டுகிறது. இச்செய்தி,

"உயர்ந்தவுந்தாமே யிழிந்தவுந்தாமே யெனமறையோலமிட்டு உரைக்கும்
வியந்த தஞ்செய்கை யிரண்டினுள்ஒன்று வேதியனாகிமுன்காழ்
பயந்தருமிறைவர் மற்றதுங்காட்டப் பள்ளனாய்த் திருவிளையாடல்
நயந்தபூம் பணையின்வினைசெய அன்பர்நண்ணிமுன்நண்ணினர் அம்மா.

என்று பேரூர்ப்புராணத்தில் அறிவிக்கப்பெறுகின்றது,

"கடுவாள் விழியிணை யாரூர்ப் பாவை கலவிவலைப்
படுவார் தமிழ்ச்சுந்தரர் பாடற்கியைப் பரிசின்மையால்
நெடுவாளை பாயும் வயலூடுபோகி நெடிய பள்ள
வடிவாகி நின்றதும் பேரூர்ச் சிவன்கொங்கு மண்டலமே."

என்ற கொங்குமண்டலச் செய்யுளும் குறித்தற்குரியன.

திருவெஞ்சமாக் கூடல் என்னும் தலத்துக்குச் சுந்தரர் எழுந்தருளும்போது பொருள்கொடுக்கத் திருவுளங்கொண்ட பெருமான் விகிர்தபுரிநாதர் ஒருமுதிய அந்தணவடிவுகொண்டு தன் மக்களை ஒரு ஆய்மூதாட்டியிடம் அடகுவைத்துப் பொன்வாங்கிக் கொடுத்துப் பாடல்பெற்று அடியார்க்கு எளியரானார். இச்செய்தியும் வெஞ்சமாக்கூடல் புராணத்துள்ள செய்தியாகும்.

சம்பந்தப்பெருமான் வேனிற் கொடுமை விலக்க முத்துச்சிவிகை யளித்ததும், அடியார்களுடைய வருத்தமும் தணிக்க பந்தர் அளித்ததும் எளிமையின் எல்லையைக் காட்டுஞ் செய்திகள் அன்றோ!

11 FEB 1946

உ
குருபாதம்

# பெரியார் பெருமை

[ஆசிரியர், திரு. அ. வரதநஞ்சையப் பிள்ளை அவர்கள்]

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியார் மகிமை எங்கே? அதனை மேலான முறையில் நாடகமாக்க நம் சிற்றறிவெங்கே? இருகொங்கையு மில்லாள் விரும்பிய பெண்மை போலப் பிறர்க்கு நகைவிருந்தாவதன்றி வேறு பயன் பயக்குமோ? என என்னை யானே கடிந்துகொண்டு அக்கருத்தை மாற்றமுயன்றேன். பின்னும் அவ்வாசை, அடங்கிலதாய் வெளியிடாதே நம்மில் நாமே செய்து பார்ப்போம்; பயன்படின் மேல்முயல்வோம்; இன்றெனில் கைவிடுவோம் என்று பையவந்து பசப்பி மயக்க, நரிமாவுரங்கிழித்த அம்பினிலும், அரிமாப் பிழைக்கவெய்த கோல்பழிப்பன்றாம்' எனத்துணிந்து, திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடிமாறர், மெய்ப்பொருளார், அமர்நீதியார் என்னும் ஐந்து நாயன்மார்கள் வரலாற்றையும் எளிய இனிய, இசைகலந்த கீர்த்தனம், உரைநடைகளில் சைவசித்தாந்த நுண்பொருள்களை மிக எளிய அழகிய முறையில் தோற்றுவித்து எழுதி முடித்தேன். அவற்றை எழுதுந்தோறும் அருண்மொழித்தேவர் அரும்பொருள் பொதிந்த பத்திச் சுவை பழுத்தொழுகும் இடங்களை யுணர்ந்துணர்ந்து பேயனேன் கல்நெஞ்சும் நெக்குநெக்குருகி அன்புக் கண்ணீர் ஏடகத்துப்பாய எழுத்துக்கள் அந்நீரில் மூழ்குவவாயின. இஃது தற்புகழ்ச்சியன்று. உண்மையில் நம் சேக்கிழார் பெருமான் சிந்தையைச் சைவ நூற்கண்கொண்டு நோக்குவோர் தகுதி பெறுதோரேனும் அவர் நிச்சயமாக அநுபவிக்கும் மகிழ்ச்சிக் களஞ்சியமாமன்றோ அப்புராணம்? "பத்திச்சுவைநனி

சொட்டச்சொட்டப் பாடிய கவிவலவ" என்றது அறிந்து சுவைத்த ஆர்வமொழியேயாம். ஆனால், ஒவ்வொரு சரித்திரங்களையும் படிக்கும் பகுதியில் நாவல் கதைகள் போலவும், நடிக்கும் பகுதியில் உரையாடலும் இசைப்பாடல்களும் கலப்பவும் எழுதிநோக்கினேன்? நன்று, இது பொதுமக்களின் நாடகமேடையில் பயன்படுமோ என அறியத்துணிந்து முதல்மூன்று சரித்திரங்களையும் இசைவல்லாரை ஆடல்பயிற்றி உரைகற்பித்து நடிக்கச்செய்து நோக்குங்காலையில் யான் இஃது மிக மிகப்பொருந்துமென்றே விம்மித மெய்தினேன். அக்காட்சிகளில் திருநீலகண்டர் மனைவியிட்ட சூளால் பெரும் வைராக்ய முடையராய் மனைவளங் துறந்த காலையிலும், அரன் தான் தந்த ஓட்டை மறைத்துப் பின்தா வெனச் சினந்துகேட்டு நின்மகன் கையை ........ஆனால் உன்மனைவிகையைப் பற்றி நீரில் மூழ்கிச் சத்தியம்செய் என அலக்கழிக்குமிடத்திலும் கண்ணுற்ற எண்ணற்ற கண்களில் ஒன்றேனும் நீருகாதனவில்லை. மூக்கைச் சிந்திக்கொள்ளாதவையும் ஒன்றிலது. என் நோக்கம் அவர்கள் முகத்தையே சுற்றிச் சுற்றிப் பயணம் செய்துகொண்டிருந்தது.

இயற்பகையாரிலும், மனைவியைப் பிரமசாரிக்குத் தத்தமளித்தபோது கண்சிவந்து கறுவாத முகமுமில்லை. பின் திருநீலகண்டர்க்கும் மனைவியார்க்கும் இளமை நல்கியபோதும் இயற்பகையார் காணப் பெருமான் எதிர்நின்று வரவேற்கும் போதம் ஆனந்தக் கண்ணீர் வெளிப்படாத விழிகளுமிலவாயின. மற்றைச் சரித்திரங்களிலும் இச்சுவைகள் கட்புலப்பட்டன.

---

கும்பேசர் குறவஞ்சி: மிகச்சிறந்த நாடகநூல். பக்திச்சுவை நிரம்பியது. டாக்டர், உ. வே. சாமிநாதய்யர், நூல்நிலைய வெளியீடாக வந்துள்ளது. இத்தகையபணி பாராட்டற்குரியது.

முகவரி: கலாக்ஷேத்திரம், அடையாறு. விலை 1—8—0

## மகாமகம்

தற்போது உலகம் யுத்தத்தில் சிக்கிக்கொண்டு அவதியுறுகின்றது. அதனால் உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமா? போக்குவரத்து வசதிகளுக்காக ஏற்பட்ட புகைவண்டிகளும் குறிப்பிட்ட சிலவே செல்கின்றன. இஃது இவ்வாறாக, தமிழ்நாட்டுமக்கள் — சமயத்தில் ஈடுபட்ட மக்கள் இதையெல்லாம் பொருட்படுத்துவார்களா? இல்லை. ஆகவேபெரும்பாலானமக்களும் கால்நடையாகவே குடந்தைக்குச் செல்வாராயினர். மகாமகம் 12ஆண்டுக்கொருமுறை வருவது. ஆதலால் மக்கட்கூட்டமும் அதிகம். அதிகமக்களுக்கு அரிசிபங்கீடு காலமாகிய இந்நாளில் உணவு கிடைப்பதும் அரிது. காலத்திற்கேற்ப-சமயத்திற்கேற்பபலவகையாலும் பணிபுரிந்துவரும் தருமையாதீன ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இப்பஞ்சத்தைப்போக்க முற்பட்டார்கள். என்ன செய்தார்கள்? குடந்தையிலேயே சில ஆலயங்களில் மக்களுக்குப் பிரசாதம் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். தயிரும் பாலும் மிகுதியாக வழங்கவும் திட்டம்செய்தார்கள். அது போதுமா? நாலாபுற ஊர்களிலும் அப்படியே மேலும் ஆங்காங்கு அவர்கள் தங்க வசதியும், தங்கள் தங்கள் வாகனாதிகளைப்போட இடமும் அளித்தார்கள். நீருறிஞ்சிக் குழாய்களும் வைத்துக் குடிதண்ணீர் வசதியும் செய்யப்பட்டது. மற்றும் ஆதீன ஆலயங்களில் தரிசனத்திற்கும் விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் பழையகால பொருள்களை வைத்து யாவருக்கும் பழங்காலச் சிற்பச் சிறப்பினைத் தெரிவிக்குமுறையில் ஏற்படுத்தப்பட்ட பொருட்காட்சி சாலைக்கு, தங்கள் ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களிலுள்ள பழைய பூஜையிலில்லா விக்கிரகங்களையும் அனுப்பி உதவினார்கள். நீண்ட தூரத்திலிருந்தே கால்நடையாகவே செல்கின்ற அன்பர்களுக்கு சிற்சில இடங்களில் தங்கிச் செல்ல வசதிசெய்யப்பட்டது. அதாவது ஆதீன மடாலயத்திலும், புள்ளிருக்குவேளூர், திருவையாறு, திருபுவனம், திருப்பனந்தாள் தேவஸ்தானங்களிலும் மேற்கூறியபடியே அன்னம் வழங்கப்பட்டது. ஆங்காங்கும் செவிக்குணவாக, பண்டிதர்களைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகளும் செய்விக்கப்பெற்றன.

ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்குவளை தேவஸ்தானத்தில் மாசி மகோற்சவம் சிலகாலமாக நின்றிருந்தது. அதையும் இம் மகத்தில் சுந்தரர்பெருமானுக்கு நெல்மலை அளித்தல் திருவிழா நடைபெறச் செய்யப்பெற்றது. அக்காலங்களில் பிரசங்கங்களும் இசைக் கச்சேரிகளும் நிகழ்ந்தன.

209151

25—2—45ல் குற்றாலம் தேவஸ்தானத்தில் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், சென்னை வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் "பாட்டுகளிற் திருப்புகழ் பனுவல்" என்பதுபற்றியும், 26-2-45ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், குடவாயில், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், "அருந்தவத் தொண்டரும் - பெருந் தவமுனிவரும்" என்பதுபற்றியும் பேசினார்கள்.

26—2—45ல் பேரளம் தேவஸ்தானத்தில் மாயூரம், நாஷனல் நடுத்தரப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. N. S. கோபால கிருஷ்ண பிள்ளை அவர்கள் "அரசுபோற்றிய அடிகள்" என்பது பற்றியும், புள்ளிருக்கு வேளூர் தேவஸ்தானத்தில் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் திருவையாறு வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் "திருக்குறுந்தொகை" என்பதுபற்றியும், சீகாழி தேவஸ்தானத்தில் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் சென்னை வித்துவான் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "சிவஞான போதம்" என்பதுபற்றியும், திருக்கடவூர் தேவஸ்தானத்தில் சீகாழி லூதரன் மிஷன் உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. D. சுந்தரேச ஆச்சாரியார் "அபிராமியம்மையின் அற்புதமகிமை" என்பதுபற்றியும், திருவாரூர் தேவஸ்தானம் இராஜாங்கக்கட்டளையின் சார்பில், அண்ணாமலைநகர் வித்துவான், திரு. ஏ. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் M. A. B. L. "சைவத்தமிழ்" என்பதுபற்றியும், திருக்குவளை (கோளிலி) தேவஸ்தானத்தில் வேதாரண்ய ஆதீன வித்துவான், திரு. ஆ. முத்துச்சட்டநாத தேசிகர் அவர்கள் "சுந்தரர் அருஞ் செயல்" என்பதுபற்றியும், 27—2—45ல் திருவாரூர் போர்டு உயர் தரப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. M. இரத்தின தேசிகர் அவர்கள் "கோளிலிப்பெருமானும் குண்டையூர்கிழாரும்" என்பது பற்றியும், தருமபுர ஆதீனச் சைவப்பிரசாரகர் திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள் "பரவையார் திருமணம்" என்பதுபற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். 28—2—45ல் தருமபுர ஆதீனப் பாடசாலை இசை யாசிரியர் திரு. M. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் இன்னிசைக் கச்சேரி நடத்தப்பெற்றது.

வழக்கம்போல் 3—3—45 ஸ்திரவாரத்தன்று மாலை 6-மணி ஆதீன மடாலய பூஜைமண்டபத்தில் ஆதீனப் பாடசாலை தே ஆசிரியர் திரு. வேலாயுத ஓதுவாரவர்கள் தலைமையில் பாட (ஆகமப்பகுதி) மாணவன் கல்யாணம் "பெருமிழலைக் குறும்ப என்பதுபற்றியும், (தேவாரப்பகுதி) மாணவன் S. குருசாமி "பேயா என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

---

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at The Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram).